## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை
**(பிப்ரவரி 20-ம் தேதி முதல் பிப்ரவரி 24-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

***முந்தைய வார வானிலை (16.2.16- 18.2.16)***

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 1.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 - 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 - 4 |
| ஒப்புஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 73 - 80 |
| ஒப்புஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 48 - 54 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 - 2 |
| காற்றின் திசை (டிகிரி) | 0 - 50 |

***24.2.16 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு***

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>20.2.16 | நாள் 2<br>21.2.16 | நாள் 3<br>22.2.16 | நாள் 4<br>23.2.16 | நாள் 5<br>24.2.16 |
| மழை (மி.மீ.) | 2 | 3 | 0 | 2 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 48 - 80 | 48 - 80 | 48 - 80 | 48 - 80 | 48 - 80 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2 / வடகிழக்கு | 2 / வடகிழக்கு | 2 / வடகிழக்கு | 2 / வடகிழக்கு | 2 / வடகிழக்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம் மற்றும் மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனைகள் |
|---|---|---|
| மக்காச்சோளம், சோளம் (மானாவாரி) | முதிர்ச்சி பருவம் | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்யப்பட்ட மக்காச்சோளம் மற்றும் சோளம் ஆகிய தானியங்களை பாதுகாப்பான இடத்தில் சேமிக்கவும். |
| மானாவாரி சாகுபடி | மண் ஈரத்தை பாதுகாத்தல் | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் வடகிழக்கு பருவமழை பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் அறுவடை முடிந்த நிலங்களை உழவு செய்து கிடைக்கும் மழை நீரை |

| | | |
|---|---|---|
| | | சேமிக்கவும். |
| பருத்தி (இறவை) | விதைத்தல் | மாசிப்பட்டத்தில் இறவை பருத்தி சாகுபடி செய்ய எம். சி. யு. 5, எஸ். வி. பி. ஆர். 2, எல். ஆர். ஏ. 5166 போன்ற பருத்தி இரகங்களை தேர்வு செய்யவும். கடைசி உழவுக்கு முன்பு எக்டருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது 5 டன் மண்புழு உரம் இடவும். 75 செ.மீ இடைவெளியில் பார்களை அமைத்து அடியுரமாக எக்டருக்கு 87.5 கிலோ யூரியா, 250 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 67.5 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை பார்களின் பக்கவாட்டில் விதைப்பதற்கு முன் இடவும். விதை நேர்த்தி செய்த விதைகளை பார்களின் பக்கவாட்டில் 30 செ.மீ. இடைவெளியில் விதைக்கவும். |
| மிளகாய் (இறவை) | நோய் மேலாண்மை | மிளகாயில் பழ அழுகல் நோய் காணப்படுகிறது. இந்நோயால் தாக்கப்பட்ட பழங்களில் வெளிறிய சாம்பல் நிறத்தில் நீளவாக்கில் புள்ளிகள் காணப்படும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட பழங்களை தனியாக பிரித்து எடுத்து அழிக்கவும். இந்நோயைக் கட்டுப்படுத்த எக்டருக்கு 1 கிலோ மாங்கோசெப் தெளிக்கவும். |
| நெல், வாழை மற்றும் கரும்பு (இறவை) | நீர் மேலாண்மை | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல், வாழை மற்றும் கரும்பு போன்ற இறவை பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தள்ளிப்போடவும். |

குறுஞ்செய்தி-: மழை: பிப்ரவரி 20, 21& 23 வரை: 2, 3& 2 மி.மீ. இறவை பருத்தி: இரகங்கள்: எம்.சி.யு. 5, எஸ்.வி. பி. ஆர். 2, எல்.ஆர்.ஏ. 5166; அடியுரம்: கிலோ/ எக்டர் 87.5 யூரியா, 250 சூப்பர்& 67.5 கிலோ பொட்டாஷ்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி